
Registered as a Newspaper in Ceylon ✱ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU
தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 8
தேசிய தினசரி

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
[illegible] கொழும்பு

[illegible] மாசி 6 ஜுல்ஹஜ் 18 ஞாயிற்றுக்கிழமை (18-2-68)

### 6 பேர் ஸ்தலத்தில் மாண்டனர்

# 4 மாதங்களில் 31 பஸ் விபத்து யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தது

## மதுபோதையில் இருப்பவர்களை பொலிஸார் கைதுசெய்வர்

— நமது நிருபர் எஸ். திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப்பகுதியில் கடந்த நான்குமாதங்களில் மட்டும் இ. போ.ச. பஸ்களில் 31 வீதி விபத்துக்கள் நடைபெற்றுள்ளன. இதில் நான்கு விபத்துக்களில் மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இத்தகவல்களை வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயம் வெளியிட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் பஸ் விபத்துக்களால் உயிரிழந்தவர்களின் இத்தொகை மற்றைய ஆண்டுகளிலும் பார்க்கவிகிதாசாரத்தில் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் பஸ்சாரதிகள் மது போதையிலிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்துக்குப் பின்னர் வல்லைச் சந்தியில் நடந்த பஸ் விபத்தில் 3 பேரும். முருகண்டி. முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் பஸ் நிலையம் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொருவருமாக மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ளனர். மொத்தம் 31 பஸ் விபத்துகளின் காரணமாக அதிகமான சாரதிகளும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதிகரிக்கும் பஸ்விபத்துக்களைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மகாநாடொன்று பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில்நேற்று நடைபெற்றது. உதவிப்பொலிஸ் சுப்பிரின்டன்களான திருவாளர்கள் லியனகே, வீரசிங்கா இ.போ. ச. பிராந்திய அதிபர் திரு. பேலுப்பிள்ளை பருத்தித்துறை, யாழ்ப்பாணம் இ. போ. ச. சுப்பிரின்டன்கள் உட்பட பல உயர்தர அதிகாரிகள் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

#### பொலிஸாருக்கு புதிய அதிகாரம்

இ. போ. ச. பஸ்களை வீதிகளில் நிறுத்தி மதுபோதையில் இருக்கும் சாரதிகளை கைதுசெய்வதற்கான பூரண அதிகாரமும் நேற்று பொலிஸாருக்கு வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைகளை பொலிஸ் இன்ஸ்பெக்டர்களேமேற்கொள்ளபொலிஸ் சுப்பிரின்டன் அனுமதியளித்துள்ளார். இதனால் அதிகரிக்கும் பஸ் விபத்துக்களை [illegible] [குறைக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது]

---

## உத்தரப் பிரதேச முதல் மந்திரி ராஜினமா

லக்னோ, பெப். 17

உத்தரபிரதேச முதல் மந்திரி திரு. கரான்சிங் ராஜினமாச் செய்துள்ளார்.

உத்தரபிரதேச கவர்னர் திரு. கோபால ரெட்டி, முதல் மந்திரியின் ராஜினமாவை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனலும், பிற ஒழுங்குகள் செய்யப்படும் வரை பதவியில் தொடர்ந்து இருக்குமாறு கவர்னர், முதல் மந்திரியைக் கேட்டுள்ளார்,

திங்கட்கிழமை கூடவிருக்கும் சட்டசபை கலைக்கப்படலாம் என கவர்னர் தெரிவித்துள்ளார்.

---

## நாவலர்சந்தி படுகொலை மீண்டும் விசாரணை

யாழ்ப்பாணம். ஞாயிறு

நாவலர் சந்தி படுகொலை வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்,

யாழ்ப்பாணம் அசைஸ் நீதிமன்றத்தில் இந்த வழக்கில் எஸ். இரத்தினத்திற்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து அவர் அப்பீல் செய்ததைத் தொடர்ந்து இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. இவ்வழக்கில் தெய்வேந்திரம் என்ற வாலிபரை நாவலர் சந்திக் கருகாமையில் வைத்து சுட்டுக்கொலை செய்ததாக மரண தண்டனை விதிக்கப்பட்ட இரத்தினம் உட்பட மூவர் மீது குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் அசைஸ் விசாரணையில் நீதியரசர் மாணிக்கவாசகர் ஐந்துக்கு இரண்டு ஜூரிகளின தீர்ப்புக்கிணங்க மற்றைய இரு எதிரிகளையும் விடுதலை செய்து இரத்தினத்திற்கு மரண தண்டனை விதித்திருந்தார். [கா. நி]

---

## பொலிஸ் உடையில் கள்வர் கோஷ்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொலிஸ் உடை அணிந்த கள்வர் கோஷ்டியொன்றை கண்டுபிடிப்பதில் வடபகுதிப் பொலிசார் உஷாராகவுள்ளனர் இதுசம்பந்தமாக இரு கார்களையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றிரவு சென்ற இக் கோஷ்டியினர் அங்குள்ள ஒரு வீட்டுக்குள் ஆயுதங்களுடன் சென்று சில பொருட்களையும் களவாடிச் சென்றதாக பொலிசாருக்குச் செய்யப்பட்டுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு கார்களில் சுமார் 18 பேர் இக் கோஷ்டியில் இருந்ததாகவும் 6 பேர் பொலிஸ்உடையில் இருந்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [கா. நி]

---

## யாழ்ப்பாண விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி

### விளையாட்டு அமைச்சு அக்கறை காட்டுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாகாணத்தைச் சேர்ந்த கல்லூரிகளுக்கும் சனசமூகநிலையங்களுக்கும் மகாவித்தியாலயங்களுக்கும் ஓடுதல், பாய்தல் சம்பந்தப்பட்ட விளையாட்டுக்களுக்கு நவீன புதியமுறைப் பயிற்சிகளை அளிப்பதற்கு விளையாட்டமைச்சு தீவிர கவனம் செலுத்தியுள்ளது. இதன் முதல்படியாக தேசிய விளையாட்டுப் பயிற்சியாளர் திரு. அன்ரனி அபயசிங்கா யாழ்ப்பாணம் வரவுள்ளார். வடமாகாண விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டுப் பயிற்சிகள் இம்மாதம் 25-ம், 26-ம் 27-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் கனகரெத்தின மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது

இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட விளையாட்டதிகாரிகளான திரு. என். தேவபாலன், ஏ. டி. பி யேசுதாசன் ஆகியோர் கவனித்து வருகின்றனர்,

இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்பும் கல்லூரிகளும் சனசமூக நிலையங்களும் மேற்குறிப்பிட்ட விளையாட்டதிகாரிகளுடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாருக்கும் இப் பயிற்சிகள் அளிக்கப்படும். [விநி.]

---

## மலேரியாவை தடுக்க 70 புதிய டாக்டர்கள்

கொம்பனித்தெரு, சனி

புதிதாகவெளியேறிய 70 டாக்டர்களுக்கு நாட்டின் பலபகுதிகளிலும் நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

பிரதமர் திரு.டட்லி இதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த 70 டாக்டர்களுக்கும் இந்தவாரத்தில் நியமனம் வழங்கப்படவிருப்பதாக சுகாதார அமைச்சர் திரு. ஈ எஸ். சேனநாயகா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது தீவிரமாகப் பரவிவரும் மலேரியாவை ஒழிக்குமுகமாகவே இப் புதிய டாக்டர்கள் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலேரியா அதிகமாகப் பரவியுள்ள இடங்களிலேயே இவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரியவருகிறது.

---

## ரூ. 3 லட்சம கடத்தல் பொருள்கள் சிக்கின

வல்வெட்டித்துறை. சனி

பருத்தித்துறை பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத்தொடர்ந்து இன்று அதிகாலை சார்ஜன்ட் இரத்தினசபாபதி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று பருத்தித்துறை கடற்கரையில் வைத்து ரூபா மூன்று இலட்சம் பெறுமதியான மூடைகளைக் கைப்பற்றியுள்ளது.

உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த சேலைகள், சாரங்கள், தலைப்பட்டிகள் மற்றும் பொருட்களைக் கொண்ட நாற்பது பெரிய மூடைகள் அங்கு இருக்கக் காணப்பட்டதாம். இப்பொருட்களையும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக பொலிசார் கருதுகின்றனர். இப்பொருட்கள் இருந்த இடத்தில் [illegible] கொண்டிருந்தவர்கள் பொலிசாரைக் கட்டதும் ஓட்டம் பிடித்தனராம்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள்யாவும் பருத்தித்துறை சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரசபை, பருத்தித்துறை
# கேள்வி விண்ணப்ப அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகளுக்குரிய கேள்வி விண்ணப்பங்கள் மேற்படி சபைத் தலைவரால் கோரப்படுகின்றன:-

1. விநாயக முதலியார் தெருத் திருத்துதல்.
2. தம்பசெட்டித்தெரு திருத்துதல்.
3. 4-ம் குறுக்குத் தெரு திருத்துதல்.
4. பெருந் தெரு [வட்டாரம் 9] திருத்துதல்.
5. பெருந்தெரு [வட்டாரம் 8] திருத்துதல்.
6. வக்கமோடை ஒழுங்கை கல்போட்டு, தார் ஊற்றல்.
7. சவளுய் ஒழுங்கை கல்லுப் போட்டு தார் ஊற்றல்.
8. சென்ற் மேறி மேற்கு ஒழுங்கை (St. Maryis Church West Lane) கல்லுப்போட்டு தார் ஊறறல்.
9. ஓடக்கரை ஒழுங்கையில் வடிகால் கட்டுதல்.

கேள்வி விண்ணப்பங்கள் 29-2-68 நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக இருபத்திரங்களில் நிரப்பப்பட்டு தலைவர், நகரசபை பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இவற்றிற்குரிய விண்ணப்பப்படிவங்கள் 26-2-68 நண்பகல் பன்னிரண்டு மணிவரை இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி விண்ணப்பப்படிவங்கள் பெறுபவர் ரூபா 50/- பிணைப்பணமும், ரூபா 5/- பிரவேசப் பணமும் செலுத்தவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறுபவர்களின் பிணைப்பணம் திருப்பிக்கொடுபடமாட்டாது.

மேற்படி வேலைகளின் முழு விபரங்கள் அறிய விரும்புபவர்கள் நகரசபைக் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

நகரசபைக்காரியாலயம்,
பருத்தித்துறை.
15-2-1968

தலைவர்,
நகரசபை.
பருத்தித்துறை.
453

## ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம்
### கவியரங்கு பாஓதல்

அடுத்த கவியரங்கு மார்ச் மாத இறுதியில் நீர்கொழும்பில் நடைபெறும்.

தமதுகவிதைகளை அரங்கேற்ற விரும்புவோர் 15-3-1968-க்கு முன் அனுப்புமாறு வேண்டுகிறோம்.

பொதுச்செயலாளர்,
ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம்,
135, தர்மபாலமாவத்தை
கொழும்பு — 7.
455

## பருத்தித்துறை கடற்றொழிலாளருக்கு ஒருவாய்ப்பு

வல்வெட்டித்துறை சனி
இலங்கை கடற்றொழிலாளர் கூட்டுஸ்தாபனம் ஒரு கிளையை பருத்தித்துறை சுப்பர் மடத்தடியில் திறந்திருக்கிறது.

கடற்றொழிலுக்கு வேண்டிய மீன்பிடி உபகரணங்களை மிகவும் மலிவான விலையில் கொடுத்து சேவை செய்து வருகின்றது. இன்னும் இரண்டு மாதங்களுக்கிடையில் உத்தரவாதவிலையில் மீன் கொள்வனவுத் திட்டம் ஒன்றும் செயல்படவிருக்கிறது. மீன்வலைகள், கயிறுகள், இங்கே கொடுத்து உதவுவதனல் பருத்தித்துறை, நாகர்கோவில், செம்பியன் பற்று, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானறு போன்ற இடங்களிலுள்ள மீனவர்கள் அதிக சிரமமின்றி பெற்றுக்கொள்ள வசதியாயிருக்கிறது.

## வரி விளம்பரம்

### தேவை

கன்டீன் மேற்பார்வையாளர்களும், சமையற்காரர்களும் 1000 ஏக்கர் பண்ணையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு சாப்பாடு வழங்கக்கூடியவகையில் கடமையாற்றுவதற்கு தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ஏ. எம். ஆசீர்வாதம், ஊவாகுடஓயா, திஸமாரகம. 2090

காட்டுப்பகுதியில் மரம் அரிவதற்கு ஆட்கள்தேவை. [வாள் வைத்திருப்பவர் விரும்பத்தக்கது] வைரமரம் அரிவதற்கு 40 சதமும் நடுத்தர மரத்துக்கு 30 சதமும், மெதுமையான மரத்துக்கு 25 சதமும் வழங்கப்படும். வீட்டு வசதிகள் செய்துதரப்படும். பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். ஏ. எம். ஆசீர்வாதம், ஊவாகுட ஓயா, திஸமாரகம ஊடாக. 2089

பின்வரும் கட்டடச் சாமான்கள் தேவைப்படுகிறது. கீழ் வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டால உடன் உரிய பணம் தரப்படும். தேவைப்படும் சாமான்கள் வருமாறு:

(1) செங்கல் 4/6/9' ரூபா 30/-, ஆற்றுமணல் ரூ. 23/- கல் 1'' ரூ. 85/- 3/4'' ரூ. 100/-, 2'' ரூ. 40/- எல்லாம் கியூப் கணக்கில். செங்கட்டிகள் 1000 ரூ. 65/- வீதம். மூங்கில்கள் ஒன்று ரூ. 1 50 வீதம். காட்டு மரக்கப்புகள் வட்டவடிவமானவை 11' அல்லது அதற்கு மேல் ஒரு மரத்துக்கு ரூ. 2/- ரப்பர் ஷீட்டுகள் 1'' ஒரு சதுர அடி 22 சதம் 4''X2'' ஹார்வூட் நீளம் 9' அல்லது அதற்கு மேல் 50 சதம் ஒரு கியூபிக் அடி. பின்வரும் ஸ்தாபனத்தி ஒப்படைக்கப்படவேண்டும். 150, ஜோசப் வீதி, கிருண்ட்பாஸ், கொழும்பு. அல்லது 135, மீத் தோட்டமுல்ல வீதி, வெல்லம்பிட்டியா, கொலன்னுவா. 2088

### தேவை

சிமென்ட்பைக்கெட்டுகள்;
வெற்று சிமென்ட் பைக்கெட்டுகள் தேவை மில்க்வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். போன்: 7233
1726

### கல்வி

வகுப்பு:
தொழில்நுட்பக் கல்லூரி பிரவேச வகுப்புக்கள் ஆரம்பம்: 20-2-68. பிரவேசப் பத்தரங்கள் இலவசம். College of Education, பழைய பஸ்நிலையம் எதிராக, யாழ்ப்பாணம். 1732

## திருநெல்வேலிக்கு ரூ. 24 000 நிவாரணம் இன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு
கடந்த வெள்ளப் பெருக்கினல் சேதமடைந்த திருநெல்வேலிப் பகுதி மக்களுக்கான நிவாரண நிதி இன்று திருநெல்வேலிகிராமசேவையாளர் திரு க சொக்சலிங்கத்தினல் வழங்கப்படவிருக்கின்றது.

இப்பகுதிக்குவெள்ளநிவாரணமாக அரசாங்கம் சுமார் 24.000 ரூபாவை வழங்கியுள்ளது. நிவாரண நிதியின் முதலாவது பகுதி இன்று நண்பகல் திருநெல்வேலி காளிகோவிலுக்கு அருகாமையிலுள்ள நெசவு நிலைய மண்டபத்தில் வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது (கா. நி)

## புலோலி மாணவிகள் சாதனை

உடுப்பிட்டி, சனி
புலோலி மேற்கு சைவத் தமிழ்ப் பெண்கள் பாடசாலையிலிருந்துவட மாகாண ஆசிரியர் சங்கப் பரீட்சைக்குத் தோற்றிய 3-ம் வகுப்பு மாணவிகள் 16 பேரும் 5-ம் வகுப்பிலிருந்து தோற்றிய 6 மாணவிகளும் சித்தியடைந்துள்ளனர்.

## கேள்விவிளம்பரம்
### நகரசபை வவுனியா

இச்சபைக்கு 1968-ம்ஆண்டுக்கு மின்சாரப் பொருட்களை விநியோகிப்பதற்குசில் வைத்த கேள்விகள் வரவழைக்கப்படுகின்றது. கேள்விகள் இக் கந்தோரிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் தயார் செய்யப்பட்டு 15-3-68 முற்பகல் 12 மணிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படுதல் வேண்டும்.

8-3-68 பிற்பகல் 12 மணி வரை மேற்படி கேள்வி விண்ணப்பப்படிவங்கள் இக் கந்தோரிலிருந்து விநியோகிக்கப்படும். படிவத்தின் விலை ரூபா 25/- இப்பணம் திருப்பிக்கொடுப்பனவு செய்யப் படமாட்டாது.

கேள்விகள் அவற்றை அடக்கியுள்ள உறையின் இடதுபக்க மேல்மூலையில், "மின்சாரப் பொருட்கள் விநியோகம்1968" எனக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப் படவேண்டும்.

எம் பொன்னையா,
தலைவர், ந ச. வவுனியா
நகரசபை அலுவலகம்,
வவுனியா, 15-2-68. 456

## புதிய நிபந்தனை

காங்கேசன்துறை. சனி
தொழில் நுட்பக்கல்லூரிகளில் மாலை நேரவகுப்புகளுக்கு தோறும் பரீட்சார்த்திகள் வேலையாட்களாக இருத்தல் வேண்டுமென கல்வி இலாகா அறிவித்துள்ளது.

இது வரைகாலமும், வேலையற்றிருந்த மாணவர்களும் கலந்து பயிற்சிபெற்று வந்தனர் ஆனல் அடுத்த ஆண்டுக்கு எடுக்க இருக்கும் பயிற்சியில் இந்த புதிய நிபந்தனைவிதிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 25ம் திகதியுடன் முடிவுறுவதாக கல்வி இலாகா அறிவித்துள்ளது புகுமுகப் பரீட்சை மே மாதம் 3ம் திகதி ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
8வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
**காவல்காரன்**

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45P.M
John Wayne, Dean Martin
in
The SonS of Kathie Elder
[Technicolor & Pauavrsion]


**REGAL JAFFNA**
Daily at
3-30, 6-30, & 9-45 p.m.
Vincent Edwards & Elke Sommer
in
**THE VICTORS**
(Adults) in Panavision

**கெப்பிட்டல்** [கொழும்பு]
**பிளாஸா** [வெள்ளவத்தை]
**மைலன்** [ஜிந்துப்பிட்டி]
**விஜயா** [மட்டக்களப்பு]
**ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை]
**மொடர்ன்** [பதுளை]
**ராஜ்** [நீர்கொழும்பு]

**ரவிச்சந்திரன், கல்பனு, நாகேஷ்**
நடித்த



# மதராஸ் To பாண்டிச்சேரி



# நியூ காலிங்கன்
(இணுவில்)

தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30க்கும்
தினசரி பிற்பகல் 2-30க்கு மெற்னி உண்டு.

* உள்ளத்து உணர்வுகளை தட்டியெழுப்பும் உணர்ச்சிமிக்ககதை!
* கருணநிதியின் கனல் தெறிக்கும் வசனங்கள்!
* அமுதமான பாடல்கள், தேனினுமினிய இசை!

**எஸ். எஸ். ராஜேந்திரன்**
**காஞ்சனு — தேவிகா**
**முத்துராமன் — சுந்தரராஜன்**
நடித்த
கலைஞர் மு. கருணநிதியின்

# மறக்க முடியுமா?
(பாஸ் ...)

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
எம் ஜி. ஆர். -பானுமதி
சரோஜாதேவி
நடித்த

# நாடோடி மன்னன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யூ தாண்டுக்கு ஜோன்சன் அழைப்பு



## வியட்னும் பிரச்னையை இருவரும் அடுத்த புதனன்று விவாதிப்பர்



வாஷிங்டன், பெப். 17

ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட், அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சனை அடுத்த புதன்கிழமையன்று சந்திக்கவிருக்கிறர். இச்சந்திப்பின்போது, வியட்னும் பிரச்னைபற்றி விவாதிக்கப்படும்

யூதாண்ட் இந்தியாவில் நடைபெற்ற ஐ. நா. வர்த்தக, அபிவிருத்தி மாநாட்டுக்குச் சென்றுவிட்டுப் பின்னர் மாஸ்கோ சென்று ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்து வியட்னும் பற்றிப் பேசினுர். அதன் பின்னர், பாரிஸில் அவர் வட வியட்னும் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினுர்.

இப்பேச்சுவார்த்தைகளின் பின் அமெரிக்கா திரும்பியுள்ள ஐ. நா. பொதுக் காரியதரிசியை, வியட்னும் பிரச்னை பற்றிப் பேசுவதற்கெனத் தம்மைச் சந்திக்குமாறு அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் அழைத்துள்ளார்

இந்த அழைப்புப்பற்றி பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், தாம் வடவியட்னும் பிரதிநிகளுடன் பேசிய விபரங்களை ஜோன்சனிடம் தெரிவிக்கவிருப்பதாக யூதாண்ட் கூறினுர்.

## இந்தியாவிலிருந்து வருகிறது

கொழும்பு, சனி

இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதியினர் 4900மெற்றிக்தொன்நிறையுள்ளஇரும்புத் தண்டவாளங்களை இந்தியாவிலிருந்து பெற ஒழுங்கு செய்துள்ளனர்,

ஜாம்செற்பூரிலுள்ள டாட்டா இரும்புத் தொழிற்சாலை இவற்றை இங்கு அனுப்புகிறது. இந்தியாவிலிருந்து தண்டவாளத்தை இலங்கை பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

## விமானவிபத்தில் 10 பேர் பலி

தாய்பெய், பெப், 17

ஹொங்கொங்கிலிருந்து தாய்பெய்க்குச் சென்றுகொண்டிருந்த சிவிலியன் விமானமொன்று விழுந்து நொறுங்கியதால், 10 பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமுற்றனர்.

# ‘சமாதானம் பேச வடவியட்னும் தயாரென நான் நம்பவில்லை’

## பத்திரிகை மாநாட்டில் ஜோன்சன்

இதற்கிடையில், நேற்றுப் பத்திரிகை மாநாடொன்றில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் ‘‘ஒரு வருடத்துக்கு முன் இருந்ததைவிட இப்போது சமாதானப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வடவியட்னும் தயாராகவிருப்பதாக நான் எண்ணவில்லை’’ எனக் கூறினுர்.

ஆகவே, வடவியட்னும் சமாதானத்துக்குத் தயாராகவுள்ளதென அமெரிக்க மக்கள் தவருன அபிப்பிராயத்தைக்கொண்டிருக்க வேண்டாமென ஜோன்சன் கேட்டுக்கொண்டார்.

வியட்னுமிலுள்ள அமெருக்கத்துருப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமோவென ஜனதிபதியிடம் கேட்கப்பட்டபோது, ஆகக்கூடிய எண்ணிக்கையான 5,25,000த்தை எட்டுவதும் இதுபற்றி ஆலோசிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

### அணு ஆயுத உபயோகம்

வியட்னுமில் அணு ஆயுதங்கள் உபயோகிக்கப்படுவது பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், அத்தகைய நடவடிக்கை ஒருபோதும் ஆலோசிக்கவோ அல்லது சிபார்சுசெய்யப்படவோ இல்லையென்று ஜனதிபதி ஜோன்சன் கூறினுர்.

தற்போது தென்வியட்னுமில், அமெரிக்கத்துருப்புகளுக்குத் தலைமை தாங்கும் ஜெனரல் வெஸ்ட்மோர்லண்ட் பதவி மாற்றஞ்செய்யப்படலாம் என்ற செய்தி பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது, அச்செய்தி தவருனது என்றும், ஜெனரல் வெஸ்ட் மோர்லண்ட் மீது தமக்குப் பூரண நம்பிக்கையிருப்பதாகவும் ஜனதிபதி ஜோன்சன் கூறினுர்.

### இந்திய தூதுவர் ரஸ்கை சந்தித்தார்

அமெரிக்காவிலுள்ள இந்திய தூதரகப் பொறுப்பதிகாரி திரு. பானர்ஜி. நேற்று அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்கைச் சந்தித்துப்பேசினுர். வியட்னும் விவகாரத்தையே இருவரும் விவாதித்ததாகக் கூறப்பட்டது.

### சமரசம் தோல்வி

நாம்பென், பெப். 17

கம்போடிய இளவரசர் நொரோடம் ஷிஹானூக், கம்போடியாவுக்கும் தாய்லாந்துக்குமிடையே சமரசம் ஏற்படுத்தும் சுவீடிஷ் சமரச தூதுகோஷ்டியின் முயற்சி தோல்வியடைந்துவிட்டதாக இங்கு அறிவித்தார்.

### பிரபல நாட்டிய ஆசிரியர் மரணம்

தஞ்சாவூர், பெப். 17

பிரபலதென்னிந்திய பரத நாட்டிய ஆசிரியரான திரு. சொக்கலிங்கம்பிள்ளை இங்கு நேற்றுக்காலை மரணமானுர், அவருக்கு வயது 76 இவர், சங்கீத, நாடக அகடெமியின் விருதுபெற்றவராவர்.

### மரத்திலிருந்து விழ்ந்தவர் மரணம்

#### விசாரணைநடை பெறுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

மரத்திலிருந்து வீழ்ந்ததால் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பொன்னுத்துரை என்பவர் நேற்று மரணமானுர். கந்தரோடையைசேர்ந்தஇவரின்மரணம் சம்பந்தமாக யாழப்பாணம் ஆஸ்பத்திரியில்நேற்றுமரண விசாரணை நடத்தப்பட்டது.

மரணவிசாரணையின் பின்னர்சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லாததால் பொலிஸாரைதொடர்ந்து விசாரணைசெய்யுமாறு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி தீர்பளிப்பதை ஒத்திவைத்தார். [கா.நி.]

# ஹியூ நகரில் கடும் சண்டை

சைகோன், பெப். 17

இதறகிடையில், தென் வியட்னுமில், அரசபட்டினமான ஹியூவைக் கைப்பற்றுவதற்கான போர், நேற்று 17வது நாளாக, மிக உக்கிரமாக நடந்தது.

ஹியூவிலிருந்து வடவியட்னும், வியட்கொங் துருப்புகளை அகற்றுவதில் மேலும் எவ்வித முன்னேற்றமும் காணவில்லையென அமெரிக்க இராணுவ அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஹியூ நகரின் தெற்கு, மேற்குச் சுவர்களும், கிழக்குச் சுவரின் சில பகுதிகளும் வியட்கொங்கியரின் கைகளிலே வீழ்ந்துள்ளன. அரசமாளிகையும் வியட்கொங்கியர் அதிகாரத்திலேயே உள்ளது.

வியட்கொங்கியரின் தாக்குதலின், 3,700 தென்வியட்னும் சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவும், 20,000க்கும் அதிகமானேர் காயப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

# பந்தோபஸ்து சபையில் கம்போடியா புகார்

நியூயோர்க், பெப். 17

இதறகிடையில், இம்மாதம் 2ந் திகதியன்று, அமெரிக்க, தென் வியட்னும் துருப்புகள் கம்போடிய எல்லைக்குள் தாக்கியதாகவும், இதன்விளைவாக 1 சிவிலியன் இறந்ததாகவும் மற்றும் 5 பேர் காயமுற்றதாகவும் கம்போடியா நேற்று ஐ. நா. பந்தோபஸ்து சபையில் புகார்செய்துள்ளது.

இச்சம்பவம் நடந்த அதே தினம், கம்போடியவானப் பிராந்தியத்தில் ஒரு விமானம் [illegible] கம்போடிய பிரதிநிதி ஐ. நா. பந்தோபஸ்து சபையில் [illegible]தார்.

# ரயில் பெட்டிகளுக்கு தீ வைத்தனர்

பம்பாயில்

## 72 பேர் காயம்

பம்பாய், பெப். 17

பம்பாயில் மலாட் என்னுமிடத்தில் நடைபெற்ற கலவரத்தையடுத்துத் தடைப்பட்டிருந்த ரயில் சேவைகள் இன்று மீண்டும் வழக்கம்போல் இயங்க ஆரம்பித்துள்ளன.

ரயில்சேவைகள் திருப்திகரமாக நடைபெறவில்லையென ஆத்திரங்கொண்ட சில பிரயாணிகள் நேற்று மலாட்டில் ரயில் ஒன்றைத் தடுத்து நிறுத்தி அதிலுள்ள சில பெட்டிகளுக்குத் தீ வைத்தனர்.

இதன்விளைவாக 71 பேர் காயமுற்றனர்.

# பொதுச் சந்தையில் பிரிட்டிஷ் அனுமதி

ஐரோப்பிய

## பிரான்ஸ் — மே. ஜெர்மனி உடன்படிக்கை

பாரிஸ், பெப். 17

பிரிட்டன், படிப்படியாக ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேருவதற்கு வழிவகுக்கும் வகையில், பிரான்சுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது.

பாரிஸில், பிரெஞ்சுஜனதிபதி டிகோலுக்கும், மேற்கு ஜெர்மன் அதிபா டாக்டர் கெயிஸிங்கருக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, இவ்விரு நாடுகளுக்கும் இத்தகைய ஒழுங்கொன்றுக்கு உடன்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## பிரிட்டனில் நடைபெறவிருக்கும் கிராம அபிவிருத்தி மாநாடு

### இலங்கையும் பங்குபற்றுகிறது

லண்டன், பெப். 17

வெளிநாட்டு அபிவிருத்தி சம்பந்தமானஏழாவது கேம்பிரிட்ஜ் மாநாடு அடுத்த மாதம் கேம்பிரிட்ஜ் நகரிலுள்ள யேசு கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. இலங்கை உட்பட 40 நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றுவார்கள். மார்ச் மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகும் இந்தமாநாடு ஏப்ரல் மாதம் 4-ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது

இலங்கைப் பிரதிநிதியாக விவசாய உணவு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவா இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்.

இந்த மாநாட்டை கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின்

[6-ம் பக்கம் பார்க்க]

# அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்த வேண்டும்

— பிரெஷ்னெவ்

மாஸ்கோ, பெப் 17

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசியான திரு. பிரெஷ்னெவ், அமெரிக்க வெளிநாட்டு கொள்கையை வெகுவாகக் கண்டித்து, லெனின்கிராடில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

வியட்னும், கொரியா. மேற்கு ஆசியா, ஜெர்மனி ஆகிய நாடுகள் சம்பந்தப்பட்ட அமெரிக்க வெளிநாட்டுக்கொள்கையைத் திரு. பிரெஷ்னெவ் கண்டித்துப் பேசினுர்.

வியட்னும் பற்றி அவர் குறிப்பிடுகையில், ‘விவேகத்தின் குரலுக்கு அமெரிக்கா செவிசாய்த்து, வடவியட்னும் மீதான குண்டுவீச்சை நிறுத்திக்கொள்ள வேண்டும்’ என்று அவர் அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடவுளை நாம் ஒன்றும் கேட்கத்தேவையில்லை. நமக்குத் தேவையானது அவருக்குத் தெரியும். அன்புள்ள தாய் தன் குழந்தைக்குத் தேவையானதை அளிப்பதுபோல், நாம் கடவுளையே நம்பிவிட்டால் அவர் எல்லாம் தருவது உறுதி.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 889

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு மாசி 6ஙீ உ (18-2-68)


## பண்டிதர், புலவர்கள்

பண்டிதர், புலவர் பட்டம் பெற்றவர்களை மாணவ ஆசிரியர்களாக வாவது நியமிக்க வேண்டுமென்று ஒருபரிதாபமான வேண்டுகோள் தமிழ் எம்.பி.மார்களுக்கு விடுக்கப்பட்டுள்ள செய்தி நேற்று 'ஈழநாடு'வில் வெளியாயிற்று ஏற்கனவே தமிழ் எம். பி. மார்கள், இவர்கள் விஷயத்தில் முனைந்தும் அது பலிக்கவில்லையாம். அதே காரணத்தைக்கூறி, தமிழ் பிரதிநிதிகள் இவ் விஷயத்தில் இப்போது சும்மா இருந்துவிடக்கூடாது.

எஸ்.எஸ்.ஸி. பரீட்சையில் 6பாடங்களில்விசேஷ சித்திபெற்றோ அல்லது அதற்கு ஈடான பிரவேசப் பரீட்சையில் தேறியோ தான் புலவர் அல்லது பண்டிதர் வகுப்பில் சேர முடியும். சேர்ந்த பின் நான்கு ஆண்டுகள் தமிழில் துறைபோகக்கற்று, பரீட்சையில் தேறியவர்களுக்குத்தான் அப்பட்டங்கள் அளிக்கப்படுகின்றன. அப்படிப்பட்டங்கள் பெற்றவர்களுக்கு, சிலவருடங்களுக்கு முன்வரை இலங்கைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்வேலை அளிக்கப்பட்டுவந்தது. ஆனல் பள்ளிக்கூடங்களை அரசாங்க உடமையாக்கியதும், திடீரென புலவர், பண்டிதர்களின் வாயில் மண்போட்டது. காரணம் எதுவும் கூறவில்லை. இது அவர்களுக்குச் செய்யும் பெரும் பாவமாகும்.

நாட்டில் பட்டதாரிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், ஆசிரியர் வேலைக்கு அதிகமானவர்கள் போட்டியிடுவதாலும், ஏதாவது சாக்குப் போக்குகள் கூறி, தகுதியுள்ளவர்களுக்கு கைவிரித்து வருகின்றது கல்விப் பகுதி. இந்தியாவில் பி. ஏ. பட்டம் பெற்றவர்களுக்கு வேலையில்லை என்றனர். இலங்கையில் பி.ஏ. படிக்கவும் முடியாமல் ஒருபுறம் தடுத்து விட்டு, அதிகபணம் செலவழித்து கஷ்டப்பட்டு, அண்டை நாடு சென்று படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு வேலையில்லையென்று மறுப்பது நியாயமென்று கல்வி அமைச்சரும் கூற முடியாது. ஆனல் இலங்கைப் பட்டதாரிகளுக்கே வேலையளிக்க முடியாத நிலையில், இவ்வித அநீதியான உத்தரவுகள் போடப்படுகின்றனவென்பது பகிரங்கரகசியம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கஷ்டப்பட்டுப் படித்து புலவர் பட்டம் பெற்றவர்களுக்கும் அநியாயமான இத்தடை போட்டதற்கும் அதே காரணமாகத்தான் இருக்கவேண்டும்.

படித்துப் பட்டம்பெற்ற அனைவருக்கும் பெருந்தவர்களுக்கும் அரசாங்கம் வேலையளிக்க முடியாதென்பது உண்மையே. ஆனல் இந்தியாவில் பட்டம் பெற்றார்களென்பதற்காக, இலங்கையர்களுக்கு வேலையில்லை என்று போட்டுள்ள தடையை கல்வி இலாகா நீக்க வேண்டியது அவசியமாகும். வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்று வருவது ஒரு தேசிய குற்றமாகக் கருதப்படின், அதை முன்கூட்டியே அரசாங்கம் அறிவித்துத் தடுத்திருக்கலாமே! இதற்கு மாருக, வெளிநாடு சென்று கல்வி பயிலுபவர் அதிக அனுபவமும், விரிந்த மனப்பான்மையும் கொண்டிருப்பராதலின் அவர்களுக்கு வேலை அளிக்கக்கூடாதென்பது முட்டாள்தனமுமாகும்.

இலங்கையிலே சமயக் கல்வியை கட்டாயமாக்கியுள்ளதால். புலவர். பண்டிதர் பட்டம் பெற்றவர்களின் சேவையைப் பயன்படுத்த இப்போது நல்ல வாய்ப்புண்டு. இங்குபல கல்லூரிகளிலும் சைவசமயத்தைக் கற்பிக்கத் தகுந்த ஆசிரியர்கள் இல்லை. புலவர்களும், பண்டிதர்களும் அனுமதிக்கப்பட்டால் இக்கடமையை மற்றவர்களை விட அதிக திறமையாகச் செய்ய முடியும். ஆகவே சமய பாடங்களையும் தமிழையும் கற்பிக்க அவர்களை நியமிக்கலாம். தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்று கேட்கப்படும் இக்காலத்தில், தாய்மொழியை நன்கு கற்றவர்களை தீண்டத்தகாதவர்போல் ஒதுக்கி வைத்துள்ளது விபரீதம். இந்த அக்கிரமமான, முட்டாள்தனமான தடையை உடனடியாக நீக்கவேண்டுமென்று தமிழ் எம். பி. மார்கள், கட்சிபேதமின்றி கல்வி அமைச்சரிடம் தக்கபடி எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளனர். நியாயமிருக்கையில் செய்யும் முயற்சி வீண்போக முடியாது.

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம். ஞாயிறு

தபால்தந்தி இலாகா உத்தியோகஸ்தர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் 11-வது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 20-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. யாழ் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் தாய்ச்சங்க பிரதிநிதிகள் பலரும் கலந்துகொள்ளவிருக்கிருர்கள். [கா.நி]

## இப்படியும் ஒரு பாடசாலே

உடுப்பிட்டி, சனி

அல்வாய்வடக்கிலுள்ள ஒரு அரசாங்க பாடசாலையில் 12 மாணவர்கள் மட்டுமே இப்போது கல்வி பயிலுவதாக அறியப் படுகிறது.

இப் பாடசாலைக்கெனப் பெரிய கட்டிடமும், இரு ஆசிரியர்களும் உள்ளனராம்.

## 'பியூப்லோ' விவகாரம்

பான்மொன்ஜம், பெப். 17

வடகொரியாவிலுல் கைப்பற்றப்பட்ட அமெரிக்க உளவுக் கப்பல் 'பியூப்லோ' விவகாரம், நேற்றுத் தொடர்ந்து பான்மொன்ஜம்மில் அமெரிக்க, வடகொரிய பிரதிநிதிகளிடையே விவாதிக்கப்பட்டது.

வடகொரிய பேச்சாளர் ஒருவர், கைப்பற்றப்பட்ட அமெரிக்க உளவுக் கப்பல் 'பியூப்லோ' வைச் சேர்ந்த சிப்பந்திகள் அனைவரும், வடகொரிய நீர்ப்பிராந்தியத்தினுள் தமது கப்பல் பிரவேசித்ததையிட்டு மன்னிப்புக் கோரியதாகத் தெரிவித்துள்ளார்.

## ஓய்வு

உடுப்பிட்டி, சனி

இருபது வருடகாலமாகக் கரவெட்டி, இருதயக்கல்லூரியில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. பீ. ஏ. பிலிப் ஓய்வு பெற்றுள்ளார்.

## இன்றைய பலன்

[18-2-68]

ஞாயிற்றுக்கிழமை

[மாசி ஙீ 6உ]

திதி - சதுர்த்தி காலை 7-19 மேல் பஞ்சமி.

நட்சத்திரம் - அத்தம் காலை 7-38 மேல் சித்திரை.

ராகுகாலம் - 5-03 — 6-33.

சுபநேரம் - 9-38 — 11-03.

இன்று பிறந்தவர்களுக்கு:- பொதுவாகச் சமயோசமான பலன்களே நடக்கும். முன்னேற்றத்தின் அறிகுறிகள் தென்படினும் திரைமறைவில் முட்டுக்கட்டைகளும் போடப்படும். உடல் நலம் குன்றக்கூடும். சுகாதாரமாக நடக்கவும் தெய்வ நம்பிக்கையும், திடசித்தமுமிருந்தால் வாழ்க்கை நிம்மதி நிறைந்ததாகக் காணப்படும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்டமும் கிடைக்கலாம்.

மேஷம் - செய்தொழில் தாமதம், சிந்தனை மிகுதி.

ரிஷபம் - தேடியது கிடைக்கும், தெய்வ குரு பக்தி.

மிதுனம் - இடமாற்றம் வேண்டின் மனமாற்றம் வேண்டும்.

கடகம் - வரவில் உயர்வு, வாழ்த்துமுண்டு.

சிம்மம் - தொழில் கவலை, தொல்லைகள் தோன்றும்.

கன்னி - ஆசை அலைகள், அவப்பெயர் உண்டு.

துலாம் - வெள்ளிப் பணம் துள்ளும், வேண்டியது கிடைக்கும்.

விருச்சிகம் - தூக்கம் கெடும், துன்பம் அணைக்கும்.

தனுசு - நல்ல முடிவு, நன்மைகள் சேரும்.

மகரம் - இன்பம் பொங்கும், இனசன மகிழ்ச்சி.

கும்பம் - வேவுக்கணை தொடுப்பர், விழிப்புடன் இரு.

மீனம் - தாம்பத்தியம் சிறக்கும், தனமும் சேரும்.

— சோதிடக்கலாநிதி —

திருமதி வேலுப்பிள்ளை

# சிறுஊழியருக்கும் இடமாற்றம்

கொம்பனித்தெரு, சனி

அரசாங்க இலாகாக்களில் கடமையாற்றும் சிறு ஊழியர்களும் இனி இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பியோன்மார்கள், தொலைபேசி இயக்குனர்கள், காவலாளர்கள் ஆகியோர் இடமாற்றத்துக்குள்ளாவார்கள்.

இவர்கள் அரசியலிலும் வேறு தமக்கு சம்பந்தமில்லாத அலுவல்களிலும் தலையிடுவதாகத் தெரிவிக்கப்பட்ட புகாரைத்தொடர்ந்தே இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. இதுபற்றி சில எம். பி.க்களும் முறையிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## யாழ்மாவட்டத்தில்குடும்பக்கட்டுப்பாடு பற்றி கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் குடும்பக்கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதற்காக ஆலோசனைக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் சுகாதாரசேவை அத்தியட்சகர், நான்கு வைத்திய நிபுணர்கள் உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர், இக் கூட்டத்தில் குடும்பக்கட்டுப்பாட்டைச் சரியானமுறையில் செயல்படுத்தவேண்டியதன் அவசியம்பற்றி வலியுறுத்தப்பட்டதோடு இதுபற்றி பூர்வாங்க ஆலோசனையும் நடத்தப்பட்டது.

இதற்கு முன்னேடியாக குடும்ப கட்டுப்பாடு பற்றிய பொருட்காட்சி ஒன்றையும் கருத்தரங்கொன்றையும் இங்கு நடாத்தவேண்டுமென இக் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. பொருட்காட்சியும் கருத்தரங்கும் மார்ச் மாதம் 21-ம் 22-ம் திகதிகளில் இங்கு நடைபெறலாமெனத் தெரிகின்றது. [கா. நி]

## யாழ்ப்பாணத்தில் கல்விகழகம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ் பேசும் மக்களின் வருங்கால கல்வி நிலைகளைப் பற்றி ஆராயும்பொருட்டு, சமீபத்தில் யாழ்ப்பாண கில்னர்கட்டிடத்தில் கல்விக்கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. கூட்டத்திற்கு வடபகுதியைச்சேர்ந்தபல கல்விமான்களும் கலந்துகொண்டனர்.

இலங்கையில்வாழும்தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படும் கல்விப் பிரச்னைகளைப்பற்றி நன்முக ஆராய்ந்து செயற்படுவதெனவும், கல்வியைப் பற்றிய மகஜர்களைத் தயாரித்துப் பிரசுரிப்பதாகவும் நாட்டின் கல்வி வளர்ச்சி கருதி பெற்றோர்களினதும் பொதுமக்களினதும் அபிப்பிராயங்களைப் பெற்று ஆராய்ந்து அதற்கானவழிவகைகளைச் செவதெனவும் உடனுக்குடன்சம்பந்தப்பட்டவர்களுடன்தகுந்த பேச்சுவார்த்தை நடாத்துவதெனவும், இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. எஸ். ஏச். பேரின்பநாயகம் உபதலைவர்கள்: திருவாளர்கள் எஸ். யூ. சோமசேகரம், மு. வைரமுத்து, செயலாளர்: திரு. சி. வைரமுத்து, பொருளாளர்: டாக்டர் கே. கனகரெத்தினம். [கா.நி]

## நோய்பரப்பும் சல்வீனியா ஒழிப்பதற்கு மாநகரசபை நடவடிக்கை

மானிப்பாய், சனி

யாழ்ப்பாணம் நீதவான் மாளிகைக்கு அருகாமையிலுள்ள புல்லுக்குளம் முழுவதையும் மூடி வளர்ந்திருக்கும் சல்வீனியா என்ற கொடியை அகற்றுமாறு யாழ். மாநகரசபை பொது வேலைப் பகுதிக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் இதற்கான கேள்விப் பத்திரங்களை பொது வேலைப்பகுதி விரைவில் கோர விருப்பதாகவும் தெரிய வருகிறது.

சல்வீனியா நுளம்பு பெருகுவதற்கு வாய்ப்பானஇடம் என்றும், அதன் மூலம் யானைக்கால் நோய், மலேரியா முதலியன பரவும் என்றும். கூறப்படுகிறது. மிகவும் துரிதமாக வளர்ந்து பரவக் கூடிய இக்கொடி வயல்கள்: தோட்டங்கள் அனைத்திற்கும் நாசம் விளைவிக்கக் கூடியது மாத்திரமல்ல, எங்கும் செழித்து வளர்ந்த பின்பு அழிப்பது மிகவும் கஷ்டமானதுமாகும்.

விஷமிகள் இச்செடியை மற்றக் குளங்களிலும் கொண்டுசேர்ப்பதன் மூலம் மேலும் இதன் அபாயம் பரவக்கூடுமென மக்கள் அச்சங் கொண்டுள்ளனர்,

சல்வீனியா என்ற இச்செடி ஒரு சிறந்த ஆயுள்வேத மூலிகை எனவும், மூலிகைக் கடைகளில் இது விற்கப்படுவதாகவும் தெரிகிறது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் 17-ம் வருடாந்தப் பொதுக்கூட்டம் சன்மார்க்க போதனு ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. திரு. செ. மன்மதராயன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகளாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை, தலைவர் திரு. செ. மன்மதராயன், உப-தலைவர்கள் எஸ். பி. நடராஜா, க. வீரசிங்கம், செயலாளர் திரு, ச. தம்பையா, உபசெயலாளர் திரு. இ. சிவரத்தினம், பொருளாளர் க. வை. தம்பு, உபபொருளாளர் திரு. க. நல்லதம்பி, கணக்குப்பரிசோதகர் திரு. இ. செல்லத்துரை. 12 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 'இறுதிவ…
## பணியாக்…

மறைந்த
'மகாக…

அளவெட்டி,
'பாமர மக்களிடை…
கல்வி அறிவையும் செ…
அறிவையும் பெருக்க உ…
த்த தொண்டர் எம்…
விட்டுப் பிரிந்தது ஒரு…
ழப்பே. அளவெட்டி…
வளர்ந்து பல துறைப்ப…
சேவைகளைச் செய்…
திரு. கந்தசாமி. எழு…
ளர் மத்தியில் புதிய…
கத்தை ஏற்படுத்த பு…
எழுத்தாளர்களை உரு…
கியவர் அவர். பிறமொ…
ளிலிருந்து அறிவுக்கள…
யங்களை தமிழில் பெயர்…
அறிவூட்டிய அவரை த…
கூறும் நல்லுலகம் ஒரு…
தும் மறக்காது.'

இவ்வாறு அளவெ…
வடக்கு சனசமூக நி…
மண்டபத்தில் பிரபல…
த்தாளரும், நாடக ஆசி…
ரும், விமர்சகருமான தி…
அ. ந. கந்தசாமி…
மறைவு குறித்து இசை…
ளர்களாலும் எழுத்தாள…
ளாலும் நடாத்தப்பட…
அனுதாபக் கூட்டத்…
திரு. து. ருத்திரமூர்…
'மகாகவி' பேசுகையி…
தெரிவித்தார்.

அவர் மேலும் பேசு…
யில், தமது வாழ் நாள்…
இறுதிவரை எழுத்தை…
பணியாகக் கொண்…
ருந்தவர் திரு. கந்தசா…
எனக் குறிப்பிட்கிறார். ந…
கத்துறையில் திரு. க…
சாமி ஆற்றிய பணியை…
அவர் எடுத்துக்கூறினர்'

திரு. த. சிவலிங்கம் பே…
கையில் எமது கவிபார…
யார் மறைந்த பின்பே அ…
ரது கவிதைகளின் மான்…
வெளிப்பட்டதெனவும் அ…
வாறே கந்தசாமியின் இல…
கியப்பணி இனிமேலே ம…
களுக்கு நன்கு தெரியவரு…
எனவும் தெரிவித்தார்.

திரு எஸ். ஆர். ஞானசு…
தரம் பேசுகையில் இசைய…
வர் சமூகத்தில் எழுந்துள்…
பிரபல எழுத்தாளர்களு…
கந்தசாமியும் ஒருவரென்…
அவரது பிரிவு இசையாள…
சமூகத்துக்கு பேரிழப்பாகு…
என்றும் கூறினர்.

திரு கந்தசாமியின் எழு…
தாள நண்பரான திரு. அ…
செ. முருகானந்தம் அனு…
தாபச் செய்திபொன்…
அனுப்பி வைத்திருந்தார்…
அதில் இலக்கியத்துறைக்…
திரு. கந்தசாமியின் பிரி…
ஒரு பேரிழப்பே, எனக் கு…
ப்பிட்டிருந்தார்.

திரு.கந்தசாமியின் படை…
ப்புகளைத் தொகுத்து ஒ…
நூல் வெளியிடுவதெனக் கூட…
டத்தில் தீர்மானிக்கப் பட்…
டது.

## 10 பேரில் நால்வர் கைது

சாவகச்சேரி, சனி

கடந்தபுதன்கிழமை மந்துவிலைச்சேர்ந்த கந்தன் ரத்தினம் என்பவர் மீசாலை வடக்கில் வைத்துக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகச் சாவகச்சேரிப்பொலிசாரால் தேடப்பட்டுவந்த 10 பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட வேலாயுதம், தில்லைநாதன், பொன்னையா, ரத்தினம் ஆகிய நால்வரும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, மாஜிஸ்திரேட் அந்நால்வரையும் இம்மாதம் 28-ம் திகதி வரையும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

மேலும் ஆறுபேரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவரை எழுத்தையே யாகக் கொண்டவ

## றைந்த எழுத்தாளருக்கு 'மகாகவி' அஞ்சலி

ளவெட்டி, சனி
மக்களிடையே
வையும் பொது
பெருக்க உழை
ண்டர் எம்மை
ிந்தது ஒரு பேரி
ளவெட்டியில்
ல துறைப்பட்ட
செய்தவர்
சாமி. எழுத்தா
ல் புதிய ஊக்
ற்படுத்த புதிய
ர்களை உருவாக்
ர். பிறமொழிக
அறிவுக்களஞ்சி
மிழில் பெயர்த்து
இவரை தமிழ்
வுலகம் ஒருபோ
து.'

அளவெட்டி
ன சமூக நிலைய
ல் பிரபல எழு
நாடக ஆசிரிய
சகருமான திரு.
கந்தசாமியின்
றித்து இசையா
ம் எழுத்தாளர்க
நடாத்தப்பட்ட
கூட்டத்தில்
ருத்திரமூர்த்தி
பேசுகையில்,
ர்.

லும் பேசுகை
வாழ் நாளின்
எழுத்தையே
கொண்டி
திரு. கந்தசாமி
ப்பிட்கிறார். நாட
ல் திரு. கந்த
ிய பணியையும்
துக்கூறினர்'

சிவலிங்கம் பேசு
மது கவிபாரதி
ந்த பின்பே அவ
களின் மாண்பு
டதெனவும் அவ்
சாமியின் இலக்
இனிமேலே மக்
கு தெரியவரும்
ிவித்தார்.

ஆர். ஞானசுந்
கையில் இசையா
தில் எழுந்துள்ள
ழுத்தாளர்களுள்
ம் ஒருவரென்று
வு இசையாளர்
பேரிழப்பாகும்
ினர்.

சாமியின் எழுத்
ரான திரு. அ.
ானந்தம் அனு
செய்தியொன்று
லவத்திருந்தார்.
க்கியத்துறைக்கு
ாமியின் பிரிவு
ுபே, எனக் குறி
தார்.

சாமியின் படை
தொகுத்து ஒரு
டுவதெனகூட்
மானிக்கப் பட்

## பேரில் ர் கைது

லகச்சேரி, சனி
க்கிழமை மந்து
கந்தன் ரதி
பவர் மீசாலை
வத்துக் கொலை
டது சம்பந்த
ச்சேரிப்பொலி
டப்பட்டுவந்த
நால்வர் கைது
ுள்ளனர்.

யப்பட்ட
திக்லைநாகன்,
ரத்தினம்
வரும் பருத்தித்
ஸ்திரேட் முன்
ஜர் செய்யப்
மாஜிஸ்திரேட்
யும் இம்மாதம்
ததி வரையும்
வைக்கும்படி
ார்.

ஆறுபேரைப்
தேடிவருகின்ற

---

முதலாவது

## இந்திய-நியூஸிலாந்து கிரிக்கெட் டெஸ்ட்

டுனெடின், பெப். 18

இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையேயான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் விளையாட்டுப் போட்டியில், நேற்றைய இறுதி நேர ஆட்டம்வரையான விபரங்கள் பின்வருமாறு:-

நியூஸிலாந்து

1-வது இன்னிங்ஸ்: 350

இந்தியா

1-வது இன்னிங்ஸ்:359

நியூஸிலாந்து

2-வது இன்னிங்ஸ்

3 விக்கெட் நஷ்டத்துக்கு 80.

## திருப்பிக்கொடுக்க உத்தரவு

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி ஜெயசூரியா பருத்தித்துறை சந்தைக்கருகாமையில் நின்றுகொண்டிருந்த தனது காரை தான் இல்லாத சமயம் உடைத்து தனது லைசென்ஸ் இன்சூரன்ஸ் ஆகியவற்றை எடுத்துச் சென்றதாக காங்கேசன்துறைப் பொலிசில் பருத்தித்துறையை சேர்ந்த திரு. சிவலிங்கம் நேசராசா புகார் செய்திருந்தார்.

இது சம்பந்தமாக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின் பின்னர் நேசராசாவுக்கு லைசென்ஸ் இன்ஸ்சூரன்ஸ் ஆகிய புத்தகங்களை திருப்பிக்கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## இலவச போதனை

காங்கேசன்துறை, சனி

மயிலிட்டி கண்ணகி படிப்பகத்தின் ஆதரவில் இலவச போதனை மேற்படி மண்டபத்தில் நடைபெற்றுவருகிறது.

பலாலி, மயிலிட்டி தையிட்டி ஆகிய இடங்களில் உள்ள சுமார் 50-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கண்ணகி படிப்பகத்தினரால் இலவச கல்வி அளிக்கப்படுகிறது. இவர்களின் கல்வி சம்பந்தமாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## தாமதம்

உடுவில், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்ட தொழில் நுட்ப நிலைய கழக ஆண்டு 1966-67-க்கான பரீட்சை முடிவுகள் இன்னமும் வெளிவரவில்லை.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற இறுதித் தேர்வுக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகளை பரீட்சைப் பகுதியினர் இன்னமும் அனுப்பிவைக்கவில்லையாம்.

இலங்கையிலுள்ள ஏனைய தொழில் நுட்ப நிலையத்தின் பரீட்சை முடிவுகள் ஏற்கனவே வெளிவந்துவிட்ட போதிலும் யாழ்ப்பாண தொழில் நுட்ப நிலையப் பரீட்சை முடிவுகளே இன்னமும் வெளிவரவில்லை யென தெரிகிறது.

# திருமலைச் செய்திகள்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

## துறைமுகநிலைமை

திருக்கோணமலை துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்தின் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் தொடர்ந்து தமது வேலைநிறுத்தத்தைக் கைக்கொண்டு வருகின்றபோதிலும் இங்கு தேயிலை ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் வழமைக்குக் குறைவாக இருந்தபோதிலும் ஒருவாறு நடைபெற்றே வருகின்றன. இம்மாதம் 10ந் தேதி இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. 10ந்தேதியிலிருந்து இன்றுவரை இத்துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதியாகிய தேயிலைப் பெட்டிகளின் புள்ளி விபரம் பின்வருமாறு:

10-2-68ல் ஏற்றுமதி: 4,291. இறக்குமதி: 10,132

11-2-68ல் ஏற்றுமதி: 6,960. இறக்குமதி: 7,259.

12-2-68ல் ஏற்றுமதி: 6,203. இறக்குமதி: 5,814.

## தைப்பூசத் தினம்

திருக்கோணமலை சைவாலயங்களில் நேற்றையதினம் தைப்பூசத்தையொட்டிப் பல விசேஷ ஆராதனைகளும் பூஜைகளும் இனிது நடைபெற்றன.

## திருமலை துறைமுகமும் வேலைநிறுத்தமும்

திருக்கோணமலை தேயிலை நிர்வாக ஸ்தாபனத்தில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் யாவும் தடங்கலின்றி நடைபெற்றுவருகின்றன. இந்த ஸ்தாபனத்தின் ஊழியர் யாவரும் வழமைபோல் வேலைக்குச் சென்றுவருகின்றனர். துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்தின் ரலி குமாஸ்தாக்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தாலும் இந்தக் கூட்டுத்தாபனத்தின் ஐக்கிய துறைமுகத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த மூவரும், இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த இருவருமாக ஐவர் ஏற்றுமதியில் ரலி குமாஸ்தாக்களாகவும் இலங்கைதொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த ஒரு ரலி குமாஸ்தா இறக்குமதி வேலைகளைக் கண்காணிப்பதில் ஈடுபட்டிருப்பதனால் இங்கு தேயிலை ஏற்றுமதி வேலைகள் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. இந்நிலைமையைக் குறித்து இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளைகளின் இணைக்காரியதரிசி திரு. சி. ஜீவராஜா பொதுமக்களுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே என்ற உண்மையை மறந்த பலர் நமக்கு உலைவைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார்கள்'' என்று மிக வன்மையாக அச்செயலைக் கண்டித்துள்ளார். பிரஸ்தாப வேலைநிறுத்தத்தின் பிரகாரம் கோரப்பட்டுள்ள 3 கோரிக்கைகள் பின்வருமாறு:

1. துறைமுகத்தில் தொழில் புரிந்த வழமையான தொழிலாளர்கள் அனைவரையும் உடனடியாகக் கூட்டுத்தாபனத்தில் வேலைக்கு அமர்த்தல்.

2. இவர்கள் அனுபவித்து வந்த சேவை நிபந்தனைகளையும் மற்றும் சலுகைகளையும் மீண்டும் வழங்கல் அல்லது அதற்குக் குறையாத சலுகைகள் அளித்தல்.

3 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறைகளையும் பதவி உயர்வுகள் பற்றிய திட்டங்களையும் ஏற்படுத்தல்.

## மஹா மஹம் தீர்த்தோற்சவம்

மஹா மஹம் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு இங்குள்ள பல சைவ ஆலயங்களிலும் தீர்த்தோற்சவம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் தீர்த்தக் கரையைக் குழுமி நின்று இந்த வைபவத்தில் கலந்து நீராடினர்.

## பொறுப்புணர்ச்சியற்ற செயல்

திருக்கோணமலையில் இவ்வாண்டு நடைபெற்ற சுதந்திரதின விழாவை முன்னிட்டு இங்கு வீதிகளைத் திருத்திய போது பல இடங்களில் அழகுக்கென சுற்று மதில்கள் அமைக்கப்பெற்றிருந்தன. இவற்றில் மடத்தடியில் அமைக்கப் பட்டவைகளில் சில பொறுப்பற்ற மோட்டார் வாகனச் சாரதிகளால் உடைக்கப் பட்டுக் கிடக்கின்றன.

## இனம் தெரியாத மனித சடலம்

இனம் தெரியாத ஒரு முஸ்லிம் வயோதிபரின் சடலம் இங்கு அரசினர் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் கண்டு பிடிக்கப் பட்டது. தற்போது ஆஸ்பத்திரி சவ அறைக்குள் கிடக்கும் இந்த சடலம் பற்றிய புலன் விசாரணையைத்திருமலைப் பொலிசார் மேற் கொண்டுள்ளனர்,

பிரஸ்தாபநபர் நோயுற்ற நிலையில் ஆஸ்பத்திரி ஊழியர்கள் இருவரால் வெளியே பிடித்துத் தள்ளப் பட்டாரெனவும், மனித தர்மத்திற்கு அப்பாற்பட்ட இக்கொடிய செயலைச் செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று திருமலை நகராண்மைக் கழகத்தின் முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. ஜி. லூக்காஸ் மாவட்டசுகாதார சுப்பிரிண்டனுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

# ஐயாறன் எழுதுவது

இம்மாதம் 22ந் திகதி கூடும் பார்லிமெண்ட் சபைக் கூட்டம் தொடர்ந்து பல நாட்கள் நடக்கவிருக்கிறது. இக்கூட்டத்தில் ஒவ்வொரு நாளும் எம். பி.மார்கள் கேட்கவிருக்கும் கேள்விகள் மூன்று மொழிகளிலும் அச்சாகி ஒரு புத்தகமாகக் கிடைத்துள்ளது.

தமிழ் எம். பி.மார்களில் கிளிநொச்சி கா.பொ.இரத்தினம் அவர்கள் தான் அதிகமான கேள்விகளைக் கேட்டுள்ளார். கல்விகலாசார அமைச்சரை, பள்ளி ஆசிரியர் பற்றியும், பிரதமரை, கள்ளக் குடியேற்ற விஷயம் பற்றியும் பலபல கேள்விகள் கேட்டுள்ளார்.

இதுதவிரப் பலபல தீர்மானங்களுக்கும் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார், அவர். அவையும் மூன்று மொழிகளிலும் வெளியாகியுள்ளன. ஆனால் சபையில் இதுபற்றி அமைச்சர் சிங்களத்தில் பதிலளிப்பின், சிங்களத்தில் மட்டுமே அது வெளியாகும். சிங்களம் தெரியாதவர்களுக்கு இது புரியாது.

சென்ற வாரம் கிளிநொச்சி எம். பி. இதுபற்றிக் கொண்டுவந்த ஒரு தீர்மானம் அதாவது சபை நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் இம்மூன்றிலும் மொழிபெயர்த்து வெளியிடவேண்டுமென்பதில் ஆங்கிலத்தை விட்டு விட்டு, மற்ற இரு மொழிகளிலும் வெளியிடவேண்டும் என்ற திருத்தத் தீர்மானம் சபையில் நிறைவேறியது. இதாவது உடனடியாகஅமுலுக்கு வரவேண்டும். வரும்படி பிரதமர் செய்வாரா?

ஃ ஃ

குடும்பத்தில் மூன்று குழந்தைகளுக்கு மேல் இருந்தால் அவர்களுக்குச் சில தண்டனைகளை உத்தரப் பிரதேச அரசாங்கம் விதிக்கப் போகிறதாம்! அதாவது அக்குடும்பத்தாருக்கு ஆஸ்பத்திரியின் இலவச வைத்தியம் கிடைக்காது. அக்குழந்தைகளுக்குக் கல்விச் சாலைகளில் சம்பளச் சலுகைகள் இராவாம். இன்னும் என்னென்னவோ?

இதைக் கேட்டதும், என் மனம் திடுக்கிட்டது. குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டியதுதான். அதற்காகக் குழந்தைகளைத் தண்டிக்க முற்படுவது நெஞ்சில் ஈரமற்ற செயலாகும். பெற்றோர் செய்த ''குற்றத்துக்காக'' குழந்தைகளைத் தண்டிப்பதா? ஒரு நாகரீக அரசாங்கத்துக்கு இது அழகாகுமா?

ஜனத் தொகையைச் சமாளிக்க உலகில் எங்கும் குடியேறி வசிக்கவும், விஞ்ஞான அறிவைக்கொண்டு அதிக உணவைப் பெருக்க

[8-ம் பக்கம் பார்க்க]

## சிவராத்திரிவிழா

கொம்பனித்தெரு. சனி

இம்மாதம் 26ம் திகதி நடைபெறவிருக்கும் சிவராத்திரி தினத்தைக்கொண்டாட கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் தீர்மானித்துள்ளது. கொம்பனித்தெருசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் அன்றைய தினம் விசேஷ ஆராதனையும் அன்றிரவு சங்கீதகதாப் பிரசங்கங்களும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.


# கழிவுக் காகிதத்தை பணமாக்க உதவுக

"கழிவுக் காகிதம்" என்று எதனையும் எறியவேண்டா

தினமும் உங்கள் அலுவலகத்திலும் வீட்டிலும் குப்பைக் கூடையில் எறியப்படும் பல்லாயிரம் எடையுள்ள காகிதங்கள் எம் காகிதக் கைத்தொழிலுக்கு முக்கியமான மூலப் பொருளாகும்.

இக்காகிதத்தைச் சேகரித்து நாட்டுக்கு வெளிநாட்டுச் செலவாணியைச் சேமியுங்கள்

வீணாக எறியப்படும் இப்பொருளில் நின்று மேலதிகப் பணம் பெறுங்கள்

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் கழிவுக் காகிதச்சேகரிப்பை பொறுப்பேற்க சமூக சேவா சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றது.

விபரங்களுக்கு:

கிழக்கிலங்கை கடதாசிஆலைக் கூட்டுத்தாபனம்
135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்திக் கம்பி களவு

பொரளை, சனி

கொட்டாஞ்சேனை புகையிரத நிலையத்துக்கருகாமையில் இரவு வேளையில் தந்திக் கம்பிகளை அறுத்துச் சுருட்டிக்கொண்டிருந்தவர்களைப் பொரளைப் பொலிசார் கையும்மெய்யுமாகப் பிடித்துக்கொண்டனர்.

பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து அங்கு இன்ஸ்பெக்டர் ஜெயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் மணி என்பவரை சந்தேகத்தில் கைது செய்தனர்.

ஓடிவிட்டவர் எனக் கருதப்பட்ட நடராசா அல்லது கிரல்படா என்பவர் இரவு ரோந்துக்குச் சென்ற பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டார்.

நீதிபதிமுன் ஆஜர்செய்யப்பட்ட இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கம்பிகள் மொத்தம் 2 அந்தர் இருக்கும்என மதிப்பிடப்பட்டது.

## மட்டுவிலுக்கு புதிய அசையா மணி

யாழ்ப்பாணம், ஞாயிறு

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் கோவிலுக்கான புதிய அசையா மணி ஒன்று வார்க்கப்பட்டுள்ளது. கடந்த தைப்பூசத் திருநாளன்று நல்லூரைச் சேர்ந்த தம்பிப்பிள்ளையால் வார்க்கப்பட்ட இம்மணி சுமார் 1400 ரூத்தல் நிறையுடையதாகும். 10000 ரூபா பெறுமதிவாய்ந்த இம்மணி அடுத்த மாதத்தில் கோபுரத்தில் அமைக்கப்படும். (கா. நி.)

## மூவர் சரண் ரிமாண்டில் வைக்க உத்தரவு

குரும்பசிட்டி, சனி

சங்கானை நிச்சாமத்தில் முதலாம் திகதி இருதரப்புக் கோஷ்டியினரிடையில் நடைபெற்ற கலவரத்தில்துப்பாக்கியினால் சுடப்பட்டுமரணமான வன்னியன் குமரேசனின் கொலை சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்களில் சுப்பையா நடேசு ஆறுமுகம் ஆகியமூவர்களும் தமதுவழக்கறிஞர் திரு ஆர், ஜே. செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இம்மூவரையும் இம் மாதம் 28ம் திகதிவரை ரிமாண்டில்இருக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சங்கானைப்பொலிஸாரினால் ஏற்கனவே இக்கொலைசம்பந்தமாக கைது செய்யப்பட்ட செல்வரத்தினம் என்பவரும் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார். இக்கொலைச் சம்பவம் குறித்து சுப்பிரமணியம் என்ற நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளதைத்தொடர்ந்துசங்கானைப் பொலிஸாரால் தேடப்பட்டு வருகிறார். அடுத்த தவணையின் போது இச்சந்தேகநபர்கள் மீது. கொலைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப் படவிருப்பதாகத்தெரிகிறது

## பிரசாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொகுதிகள் தோறும் பிரசாரக்கூட்டங்கள் நடாத்த தமிழ்க்காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

முதலாவது பிரசாரக்கூட்டம்நாவலாரை நகரில்நடைபெறும். அடுத்த பிரசாரக் கூட்டத்தை கிளிநொச்சியில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பிரசாரக் கூட்டங்களில் மாவட்டசபை மசோதா பற்றி விளக்கிக்கூறப்படுமாம்.

## சங்கானை சம்பவம் ரூபா 1000 பிணையில் செல்ல அனுமதி

குரும்பசிட்டி, சனி

சங்கானை கோஷ்டிக் கலவரத்தின்போது இறந்தவரான குமரேசனின் பிரேத ஊர்வலத்தின்போது இம்மாதம் 8-ம்திகதி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தினால் 12 பேர் காயமடைந்துள்ளது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்த மூவரை மல்லாகம் பதில் நீதிபதி திரு. பாலசிங்கம்தலா 1000 ரூபா பிணை செலுத்திச் செல்ல அனுமதித்துள்ளார் இவர்கள் மீண்டும் அடுத்த மாதம் 7ம் திகதி கோர்ட்டில் ஆஜராகவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. சங்கானை கிழக்கைச் சேர்ந்த ஏ. பிள்ளையினார், எம் தர்மலிங்கம், ரி.வேலாயுதம் ஆகியோர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களாகும் முன்னர் இம்மூவரும் இம்மாதம் 14-ம்திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர் சந்தேக நபர்களின் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

## மீசாலையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மீசாலைப் பகுதியில் வியாழக்கிழமை நடைபெற்ற கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து மீசாலையில் ஒரு பொலிஸ் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாயம் மேற்கொண்டுள்ளது

இக்கொலையைத் தொடர்ந்து இருபகுதியினருக்குமிடையில் தொடர்ந்து அசம்பாவிதம் நிகழாமலிருக்க பொலிஸார் கூடுதலாக இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினத்தினம் என்பரின் கொலை சம்பந்தமாக ஐவரை சந்தேகத்தின்பேரில் பொலிஸார் தேடிவருகின்றனர்.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. [கா. நி.]

மயிலிட்டி கி. ச.

## 29ல் நியமன பத்திரம்

குரும்பசிட்டி, சனி

மயிலிட்டி கிராம சபையின் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 29ந் திகதி யாழ். மாவட்டதேர்தல்உதவி அதிகாரியினால்ஏற்றுக்கொள்ளப்படும். மொத்தம் 18 வட்டாரங்களுக்கும் கிராம சபைக் காரியாலயத்தில் வைத்து நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## பிரிட்டனில்..

[3-ம்பக்கத் தொடர்ச்சி]

வெளிநாட்டுஆய்வுக்கமிட்டி பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்திருக்கிறது. கேம்பிரிட்ஜியிலுள்ள சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் டாக்டர் ரொனல்ட் ரொபின்சன் இந்த மாநாட்டுக்கு தலைமை தாங்குவார். 'தேசிய அபிவிருத்திக்கு கிராமத்தின் பங்கு' என்பதே இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கும் முக்கிய விஷயமாகும். கிராம வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதே இந்த மாநாட்டின் பிரதான நோக்கமென திரு. ரொபின்சன் தெரிவித்தார்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 18-2-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வலை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 பா வளம், 7-00 கத்தோலிக்கநிகழ்ச்சி, 7-30 முத்திநெறி — சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு — டாக்டர் எம். ஏ. வி. தேவதாசன், 9-45 பாட்டு — ராமேஸ்வரி பாலகிஷ்ணன்.

## கல்லூரி கட்டணம் கட்டாயப்படுத்தக்கூடாது

### அதிபர்களுக்கு அறிவிப்பு

கொம்பனித்தெரு, சனி

பாடசாலை மாணவர்களிடமிருந்து கட்டாயப்படுத்தி கட்டணம் அறவிடப்படக்கூடாது என கல்வி அமைச்சு சகல அரசாங்க கல்லூரி அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபமொன்றில் தெரிவித்துள்ளது.

மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணம் வீணாக செலவிடப்படக்கூடாது எனவும் இந்தசுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கரவெட்டியில்

## நாவலன் சைவ பாடசாலை

உடுப்பிட்டி, சனி

கடந்த 50 வருடங்களுக்கு மேலாகக் கரவெட்டிமேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை என வழங்கிவந்த இப்பாடசாலை இம் மாதம்முதல் கரவெட்டி மேற்கு நாவலன் சைவப் பாடசாலை எனக் கல்விப்பகுதியினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாகப் பிரஸ்தாப பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கமும், உடுப்பிட்டி எம். பி. திரு.மு. சிவசிதம்பரமும் எடுத்துக்கொண்ட விடாமுயற்சியின் பயனாகவே நாவலன்சைவப் பாடசாலையெனப் பெயர் மாற்றஞ் செய்வதற்குக் கல்வியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அனுமதித்துள்ளதாக மாவித்தியாதிபதிதிரு. சீ. ஏ. ஞானசேகரம் அறிவித்துள்ளார்.






கோயா சோப்பும் டால்க் பவுடரும் உங்கள் ஆசைகளை நனவாக்கும் அரிய வனப்பை வழங்குகின்றன...........

கண வேளையில் உலகின் நாகரிகத் தலை நகரங்களின் ஒய்யார அழகு மாதர்களில் நீங்களும் ஒருவராகி விடுகிறீர்கள்...........

உலகின் தலை சிறந்த வாசனைத் தயாரிப்பாளர்கள் சீர் செய்தளிக்கும் கோயாவின் வனப்பூட்டும் பவுடரும் சோப்பும் தரும் வாசனையில் மிதந்து வரும் பெண்ணின் பெருமையே பெருமை!

கோயாவின் பெயர்பெற்ற வாசனை ரகங்களில் விரும்பியதைத் தேர்ந்தெடுங்கள்.

Goya லண்டன் - பரிஸ் - நியூயார்க் மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா

ரேக்கிட் அன்ட் கோல்மன் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கஊழியர் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசாங்க இலாகாக்களுக்கிடையேயான 'நொக் கவுட்' உதைபந்தாட்ட மோதல்களின் சில போட்டி முடிவுகள் பின்வருமாறு:—

## தபால் இலாகா கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம் தபால் இலாகாவுக்கும் யாழ்ப்பாணம் கச்சேரிக்குமிடையே நடைபெற்ற ஒரு காரசாரமான உதைபந்தாட்ட மோதலில் கடுமையான மோதலின் பின் தபால் கோஷ்டி 1—0 கோலால் கச்சேரிக்கோஷ்டியை வென்றது.

இப்போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள் அனைவரும் சுறுசுறுப்பாக ஆடிய போதும் நிதானம் தவறாது சிறந்த 'பாசிங்' ஆட்டத்தை மேற்கொண்டனர். இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில்கச்சேரி ஒரு கோலும் போடாத வகையில் தபால்கோஷ்டி ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. இச்சந்தர்ப்பங்களில் இருகோஷ்டியினரும் ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் பெரும் பலப்பரீட்சையில் ஈடுபட்டனர். இதனால்இடைவேளைக்குப் பின்னர் ஒருவராலும் கோல்கள் போட முடியவில்லை.

## கல்வி இலாகா வெற்றி

கல்வி இலாகாக் கோஷ்டிக்கும் இ. டோ. ச கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் அருமையாக ஆடிய கல்விப் பகுதிக் கோஷ்டியினர், இ. போ. ச. கோஷ்டியினர் ஒரு கோலும் எடுக்காத வகையில் மொத்தம் 4—0 கோல்களால் வெற்றியீட்டினர்.

இப்போட்டியின் ஆரம்பத்தில் இ. போ. ச. வீரர்கள் உற்சாகமாக ஆடியபோதும் கடைசியில் தமக்குக்கிடைத்த கோலடிக்கும் சந்தர்ப்பங்களை தவறவிட்டுக் கொண்டேயிருந்தனர். இக்கட்டங்களில் கல்வி இலாகா வீரர்கள் அருமையாக ஆடி அடுக்கடுக்காக கோல்களை அடுக்கிக்கொண்டே யிருந்தனர். இக்கட்டங்களில் கல்வி இலாகாவின் விளையாட்டுப் பாராட்டக்கூடியது.

வெற்றிதோல்வியிசிலே

...டற்படை வீரர்களும், காங்கேசந்துறை சிமேந்து கூட்டுஸ்தாபன வீரர்களுக்குமுடையே நடைபெற்ற

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

சுழிபுரம், சனி

யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுக் கோஷ்டிக்கும், யாழ் இ.போ.ச. விளையாட்டுக்கோஷ்டிக்கும் சினேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இ.போ.ச.வீரர்கள் 128 ஓட்டங்களையும் யாழ்ப்பாண கல்லூரி வீரர்கள் 9விக்கட்டு நஷ்டத்துக்கு 176 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் இ.போ.ச. கோஷ்டியினர் 111 ஓட்டங்களையும் பெற்று, யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டி ஒரு இன்னிங்ஸ் 37ஓட்டங்களால் இ.போ.ச. கோஷ்டியினரைத் தோற்கடித்தது.

ஒருபெரும் பலப்பரீட்சையில் இருகோஷ்டிகளும் ஒன்றையொன்று விட்டுக்கொடுக்காத காரணத்தால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இபபோட்டியில் இரு கோஷ்டியினரின் விளையாட்டுத்தரமும்உயர்ந்ததாகவே காணப்பட்டது கட்டத்துக்குக் கட்டம் இருபகுதி வீரர்களும் ஏற்படுத்திய கோல்களைபோடும் சந்தர்ப்பங்கள் இரு பகுதியினர்களாலும் வெற்றிகரமாகவும் கவர்ச்சிகரமாகவுப் முறியடிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. இந்த உணர்ச்சிமிகு கட்டங்கள் போட்டியின்தரத்தை உயர்வாக்கிக் கொண்டிருந்தன இப்போட்டியின் முடிவில் இருகோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்று ஆட்டத்தை சமமாக் முடித்தனர்.

ஃ ஃ ஃ

## தபால்பகுதியினர் வெற்றி

இ. போ. ச. உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் தபால் பகுதி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் தபால்ப் பகுதியினர் 4—0 கோல்களால் இ. போ.ச, கோஷ்டியைப் படுதோல்வியடையச் செய்தனர்.

இப்போட்டியில் தபால் கோஷ்டியைச் சேர்ந்த தலைசிறந்த வீரர்களான சந்தியாப்பிள்ளை, சூசைப்பிள்ளை தர்மலிங்கம் ஆகிய வீரர்களின் ஆட்டம் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. இ. போ, ச, கோஷ்டியில் தம்பிராசா ஜேசுதாசன் என்பவர்களின் ஆட்டம் பாராட்டக்கூடியது. தபால் கோஷ்டியினர் அடுத்தடுத்து சூட்டோடு சூடாக கோல்களை விளாசிய கட்டங்கள் தரமாகக் காணப்பட்டன. இப்போட்டிக்கு திரு. எம். ரி. ராஜேந்திரன் மத்தியஸ்தராகக கடமையாற்றினர்.

ஃ ஃ ஃ

## வெற்றிதோல்வியில்லை

யாழ்ப்பாணம் கச்சேரி ஊழியர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் நீர்ப்பாசன

(8ம் பக்கம் பார்க்க)

# ஒலிம்பிக் விளையாட்டுகளில் தென்னபிரிக்கா அனுமதி

## அல்ஜீரியா, எதியோப்பியா பகிஷ்கரிக்க முடிவு

மெக்ஸிக்கோ, பெப். 17

மெக்ஸிக்கோவில் இவ்வருடப் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைப் பகிஷ்கரிப்பதென அல்ஜீரியாவும், எதியோப்பியாவும் முடிவுசெய்துள்ளன.

இனவேற்றுமை பாராட்டும் நாடான தென்னபிரிக்காவை ஒலிம்பிக் விளையாட்டுகளில் அனுமதிப்பதெனச் சர்வதேச ஒலிப்பிக் விளையாட்டுக் கமிட்டி தீர்மானித்துள்ளதை ஆட்சேபிக்குமுகமாகவே இவ்விரு நாடுகளும் இம்முடிவை மேற்கொண்டுள்ளன.

எதியோப்பிய விளையாட்டுக் கமிட்டியைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர், தென்னபிரிக்காவை அனுமதிப்பதென்ற முடிவு, 'ஒரு கட்சியின் வெற்றியேயன்றி தென்னபிரிக்காவின் வெற்றியாகாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னபிரிக்காவை ஒலிம்பிக்விளையாட்டுக்களில் அனுமதிக்கும் முடிவை, சோவியத் ரஷ்யாவின் ஒலிம்பிக் கமிட்டியும் எதிர்த்துள்ளது ஆனல், அதுவும் ஒலிம்பிக் விளையாட்டுக்களைப் பகிஷ்கரிக்குமா என்பது பற்றி இதுவரை ஒன்றும் தெரியவில்லை.

——

## ஸ்புட்னிக் வென்றது

அனுராதபுரம், சனி

அனுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் ஸ்புட்னிக் விளையாட்டுக் கோஷ்டிக்கும், அர்ச் யோசப் பழையமாணவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 2-1 கோல்களால் ஸ்புட்னிக் கோஷ்டி வென்றது. திரு. கென்றி குணசேகரா மத்தியஸ்தம் வகித்தார்.


ரூ. 110,000\- பரிசு

(ரூ. 75,000\- அல்ல)

யானை மார்க் குளிர்பான

போத்தல் - மூடி

போட்டியில்

எமது போட்டிக்கு கிடைத்துள்ள அமோக வரவேற்பினுல் நாம் பரிசுத் தொகையை கூட்டியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

ரூ. 75,000/- லிருந்து ரூ. 110,000/-

ரூ. 83,750/- போட்டியில் பங்குபற்றுவோருக்கு

ரூ. 26,250/- யானை மார்க் குளிர் பானங்களை வழங்கும் கடைகள், கிளப்புகள், சினிமாக்கள், ஹோட்டல்கள், மதுபானக் கடைகள், வாடி வீடுகள், கன்டீன்கள் மற்றும் விநியோக நிலையங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் - நீங்கள் செய்ய வேண்டியது-
சிறு விளக்கம்

எங்கள் போத்தல் மூடிகளில் நீங்கள் கண்டெடுக்கும் எழுத்துக்களைக் கொண்டு எமது முன்னைய விளம்பரங்களில் கொடுக்கப்பட்டுள்ள யானை மார்க் குளிர் பானங்களின் 14 வகையருக்களின் பெயர்களையும் உருவாக்குங்கள்.

எமது போட்டியைப்பற்றிய முழு விபரமடங்கிய பிரவேசப் பத்திரம் ஈழநாடு வார வெளியீட்டில் பங்குனி மாதம் 13-ம் திகதி பிரசுரிக்கப்படும்.

எந்த வகையரு போத்தல் மூடியையும் உபயோகித்து 14 வகையருக்களின் பெயர்களையும் உருவாக்கலாம்.

எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்

கொழும்பு — கண்டி — திருகோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புகிறவர்களுக்காக

# தேயிலை தோட்டங்களை தமிழகத்தில் ஆரம்பிக்க முடிவு

## அமைச்சர் நெடுஞ்செழியன் வெளியிட்ட தகவல்

சென்னை, பெப். 16

தமிழக அரசாங்கம் புதிதாக தேயிலைத்தோட்டங்கள் பலவற்றை ஆரம்பிக்க திட்டம் போட்டிருக்கின்றது இலங்கையிலிருந்து இந்தியா திரும்புகிறவர்களான தொழிலாளர்கள் இந்தத் தோட்டங்களில் குடியமர்த்தப்படுவார்கள். இந்தத்தகவல் இன்று தமிழக கீழ்சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவுக்கு திரும்பிவரவிருக்கும் மக்களில்பலரும் தேயிலைத்தோட்டங்களிலே உழைப்பவர்களாய் இருப்பதால் அவர்களை தேயிலைத் தோட்டங்களிலேயே கூடியவரை குடியமர்த்துவது சிலாக்கியமாய் இருக்கும் என்று தமிழக அரசு கருதுகின்றது.

கூடியவரை தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி அத்தோட்டங்களில் இந்த மக்கள் குடியமர்த்தப்படுவார்கள். இந்தத் தோட்டங்கள் அரசாங்க இலாகா ரீதியில் அமையும் என்று தமிழக கல்வி மந்திரி திரு. நெடுஞ்செழியன் சட்டசபையில் அறிவித்தார்.

இந்தத்திட்டம் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தியாகும் என்றும் இதற்காக சுமார் 47 லட்சம் ரூபாய்வரை ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

## பொருளாதார அபிவிருத்திங்கிளை அங்குரார்ப்பணம்

அட்டன், சனி

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் அட்டன் மாவட்ட வாலிப முன்னணியின் தொழிலாளர் பொருளாதார அபிவிருத்திக்கிளை இம்மாதம் 13ந் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் கீழ் இயங்கி வரும் இத்தொழிலாளர் கழகம் அபிவிருத்தித் திட்டத்தின் முதல் படியாக கைத்தறிச் சேலைகளை உற்பத்தி செய்யப்பட்ட விலையிலேயே விற்று வருகிறதாம்.

திரு. வரதராஜா தலைமை வகித்துப்பேசுகையில்சம்பள உயர்வு போராட்டத்தால் மட்டும் தொழிலாளர்களின் துயரைத் துடைக்க முடியாதென்றும். தொழிலாளர்களின் அன்றுட வாழ்க்கைச் செலவைக் குறைப்பதன் மூலமே தீர்க்க முடியும் என்றார்.

தலைவராக திரு. மாயாவும், செயலாளராக திரு. சுந்தரமும் பொருளாளராக திரு. நாராயணனும்தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## பிரதமர் விஜயம்

பொரளை, சனி

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இம்மாதம் 28-ம் திகதி வெலிமடைத் தொகுதிக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்வார். உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா, கல்வி அமைச்சர் திரு. இரியக்கொல்லை ஆகியோரும் அவருடன் செல்லவிருக்கிறார்கள். அன்று காலை மாணவர்களது விவசாயச் சித்திரிப்பு விழாவில் கலந்து கொள்ளும் இவர்கள் மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கும் சமுகம் அளிப்பார்கள் எனவும் அறியப்படுகிறது.

## "சிறுதொழில் மூலம் வேலையில்லா பிரச்னையை தீர்க்கலாம்"

### உடுவில் எம். பி. கூறுகிறார்

உடுவில், வெள்ளி

"தேசியஅரசாங்கம் இந்நாட்டின் நலன் கருதி செய்துவரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றுதான் கிராமந்தோறும் நெசவு நிலையங்களை நிறுவி உடை விஷயத்தில் இலங்கை தன்னிறைவு பெறச்செய்யும் திட்டமாகும். இன்று இலங்கை பூராவும் ஆயிரக்கணக்கான நெசவு நிலையங்கள் நிறுவப்பட்டு உடையைப் பொறுத்தளவில் ஓரளவு சுயதேவையை பூர்த்தி செய்துவருவது குறிப்பிடத்தக்கது. இத் திட்டத்திற்கு பெண்களின் ஆதரவுபெருகி வருவது போற்றத்தக்கது. பெண்கள் இதுபோன்ற சிறுதொழில்களில் ஈடுபடுவதனூ சமூகத்துக்கிடையே ஏற்படக்கூடிய பல சண்டைகள் தடைப்படுவதுடன் நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்கவும் வழி செய்வதாக அமையும்".

ஏழாலை தெற்கு மேற்கு கிராமமுன்னேற்றச் சங்க ஆதரவில் நிறுவப்பட்டுள்ள நெசவுநிலையத்தின் ஈராவது ஆண்டுப் பூர்த்தி விழாவின்போது உரை நிகழ்த்திய உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்,

யாழ்ப்பாண மாவட்ட சிறுகைத்தொழில் இலாகா உதவி அதிபர் திரு. ச. கந்தவனம் இவ்விழாவிற்குத் தலைமைவகித்தார்.

உடுவில் எம். பி திரு. வி. தர்மலிங்கம் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:

நமது நாட்டில் வேலையற்றோர் தொகை பெருகி வரும் இந்நேரத்தில் எந்த ஒரு சிறு தொழிலையேனும்செய்யமுன்வந்து அதனை ஸ்திரபடுத்திக்கொண்டு வளர்ச்சியடைய இளம்சந்ததியினர் முன்வர வேண்டும்.

வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு.பி. எல்' பற்றிக்ஸ் பேசுகையில் அரசாங்கத்தின் ஜவுளிச்சுயதேவைப் பூர்த்தித் திட்டம் ஓரளவு வெற்றியளித்து வருகிறது என்றும்மேலும் இத்தொழில் விருத்தியடைய இளைஞர்கள் பாடுபட முன்வர வேண்டும் என்றும் கூறினர்.

பெண்கள் அதிக ஆர்வம் காட்டி வருவது மகிழ்ச்சிக்குரியது என்றும் அவர் மேலும் சொன்னர்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சாம். வடிவேலு, திரு. கே. பாலசுந்தரம், திரு. க. சிவகுரு. செல்வி மு. கைலாம்பிகை ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

கலைநிகழ்ச்சிகளும், காங்கேசன்துறை கரிகாலன் நாடகமன்றத்தினரின் "வடிவான மாப்பிள்ளை" என்னும்சமூக நாடகமும் விழாவில் இடம் பெற்றது.

## 'மதம் மாற்றுவதற்காக வரவில்லை விரும்புபவரை ஏற்றுக்கொள்வோம்'

### சங்கானையில் பிக்குகள் கோஷ்டி

—நமது சிறப்பு நிருபர் [illegible]. கே. எச். நணாயக்காரா—

யாழ்ப்பாணம், சனி

காலியிலிருந்து நேற்றுக்காலை இங்கு வந்து சேர்ந்த பௌத்த பிக்குகள் கோஷ்டி சங்கானையில் கலவரம் நடந்த இடமான நிச்சாமம் பகுதிககு நேற்று நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட்டது,

காலி பௌத்தபிக்குகளான அக்குரட்டிய அமரவன்ஸ நாயக்கதேரோ, கணேகம சரணங்கர நாயக்க தேரோ, அக்குரள்ள சுமண தீர மகா தேரோ ஆகியோருடன் யாழ்ப்பாணம் நாகவிகாரை பிரதம குரு கடவத்துவ நந்தாராம தேரோ ஆகியோர் நிச்சாமம் பகுதியில் கலவரம் நடந்த இடங்களை நேரில் பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்ட இருபகுதியினரையும் சந்தித்துப்பேச்சுவார்த்தைநடாத்தினர்கள்.

"நிலைமையைநேரில்பார்ப்பதற்காகவே நாங்கள் இங்கு வந்தோமே தவிர மதம்மாற்றுவதற்கா வரவில்லை. அந்த மாதிரியான கொள்கைகள் பௌத்த மதத்துக்கு எதிரானவை. ஆனல் விரும்புபவர்களை ஏற்றுக் கொள்வோம்" என்று பௌத்த பிக்குகள் சிறுபான்மைத் தமிழ் மக்களிடம் தெரிவித்தன.

தமது பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் படிக்க முடியாமல் பெரிதும் கஷ்டமனுபவிப்பதாகவும், தமது சமூகத்தினர் தமது தொழிலைச் செய்ய முடியாதிருப்பதாகவும் சிறுபான்மைத் தமிழர் சார்பில் திரு. வி. நாகலிங்கம் பௌத்த பிக்குகளிடம் தெரிவித்தார்.

இளம் சிறுர்களை தென்னிலங்கைக்குத் தம்முடன் அனுப்பி வைக்கும்படியும், அங்கு அவர்களுக்கு நல்ல கல்வி பயிற்றுவதற்குஒழுங்கு செய்வதாகவும் பௌத்த பிக்குகள் தெரிவித்தபோது, சிறுபான்மைத் தமிழ் பெற்றோர் அதற்கு ஒப்புக்கொண்டனர். இதன்பின்னர், சங்கானைப் பட்டின சபையில் வேறொரு பிரமுகர் கோஷ்டியைச் சந்தித்து பௌத்த பிக்குகள் பேச்சுவார்த்தை நடாத்தினர். சங்கானைப்பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம், திரு. இராசையா, திரு. சுப்பிரமணியம் ஆகியோருட்படப் பலர் இதில் சமுகமளித்திருந்தனர்.

"பௌத்த மதத்துக்கு மாற்றுவதற்காக நாம்இங்கு வரவில்லை. உண்மைநிலையை அறிவதற்காக இங்கு வந்தோம்" என்று பௌத்த பிக்குகள் அவர்களிடம்தெரிவித்தனர்.

"சிறுபான்மைத் தமிழர்கள் பௌத்த மதத்துக்கு மாறுவதுபற்றிநீங்கள் என்ன கருதுகிறீர்கள்?" என்று பௌத்த பிக்குகள் கேட்டபோது, அவர்கள் விரும்பினல் அதுபற்றி எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என்று தெரிவித்தனர்.

இரு பகுதியினரிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முதல் முயற்சியாக இரு பகுதியினரையும் இன்று மாலை சங்கானையில் தமது முன்னிலையில் பேச்சுவார்த்தைக்கு பௌத்த பிக்குகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

## 4 மாதங்களில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கவலையீனமாக பஸ்களைச் செலுத்துதல், வேகமாகஓட்டுதல், மிதிபலகையில் பிரயாணம் செய்தல், கூடுதலான பிரயாணிகளை பஸ்களில் அனுமதித்தல் ஆகியவற்றிலும் பொலிஸார் இனி கண்காணிப்புச் செலுத்தி சட்டநடவடிக்கைகள் மேற்கொள்வர்,

மாநகரசபை, பட்டின சபை, நகரசபை எல்லைக்குள் 20 மைல் வேகத்துக்குக் குறைவாகவும், மற்றைய பகுதிகளில் 25 மைல் [illegible] பஸ்களை ஓட்டுவதென்றும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

## அரசாங்க..

7 ம் பக்கத் தொடர்ச்சி)

இலாகாவின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற மோதலில் விளையாட்டுத்தரம் சமமாகக் காணப்பட்டதால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற ஆட்டத்தில் இரு கோஷ்டியினரும் ஆளுக்கு ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது.

நீர்ப்பாசனக் கோஷ்டியைச் சேர்ந்த வின்சஸ்லோவின் ஆட்டம் அருமையாக விருந்தது. கச்சேரிக் கோஷ்டியில் எம். ஆரோக்கியநாதர் வீ.ரி. சிவலிங்கம் ஆகியோர் பாராட்டக்கூடிய விதத்தில் அருமையாக ஆடினர். இடைவேளைக்குப்பின்னர் இரு கோஷ்டியினரும் தலா இருகோல்களைப் பெற்றனர். இப்போட்டிமுடிவில் இரு சாராரும் 3—3 கோல்கள் பெற்று ஆட்டத்தை சமமாக முடித்தனர். இப்போட்டிக்கு திரு. ஏ. இம்மனுவேல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

[வி,நி]

## ஐயாறன்

[5-ம் பக்கத்தொடர்ச்சி

வும் வழிசெய்யவேண்டும். பெரிய குடும்பத்துக்கு அதிக உதவி அளிக்கவேண்டியிருக்க அதைவிட்டு இரக்கமற்ற முறையில் உத்தரவு போடுவது மனித நீதியாகுமா?

ஃ ஃ

சுற்றூர் தருநீர் சோற்றுத்துறையுள்
முற்று மதிசேர் முதல்வன் பாதத்
தற்றூர் அடியார் அடிநாய் ஊரன்
சொற்றான் இவை கற்றார் இன்பிலரே.

—ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்.

(பற்றற்ற அடியார்களது அடிநாய் போன்றுள்ள நம்பியாரூரன், சுற்றிலும் நீர்வளமிக்க திருச்சோற்றுத்துறையில் கோயில்கொண்டுள்ள, இளம்பிறை சூடிய முதல்வனது திருவடிக்கண் இப்பாடல்களைப் பாடினான். அவற்றைக் கற்றவருக்கு யாதொரு துன்பமும் இராது.) ——

## மரணதண்டனை

மாஸ்கோ, பெப். 17

சினுவில், லாஞ்சோ என்னுமிடத்தில். மாசேதுங் எதிர்ப்பாளர்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டு, 9 பேர் மரணதண்டனை விதிக்கப்பட்டதாவும், மற்றும் 13 பேர் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாகவும் ரஷ்ய 'டாஸ்' செய்தித் தாபனம் அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org